செ.வெ.எண்:62 நாள்:27.06.2017

**கரூர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கீழ்க்கண்டவாறு மொத்தம் 16 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | விடுதியின் விவரம் | மாணவர்களுக்கானது | மாணவியர்களுக்கானது |
|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 7 | 5 |
| 2 | கல்லூரி விடுதிகள் | 2 | 2 |

2) பள்ளி விடுதிகளில் 4 முதல் 12ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர்/ மாணவியர்களும் கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக்/ ஐடிஐ படிப்புகளில் பயிலும் மாணவ/ மாணவியர் சேரத்தகுதியுடையவர்கள் ஆவார். பிவ/மிபிவ/சீம விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ/மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**3) விடுதிகளில் பின்வரும் எவ்வித செலவினமும் இல்லாமல் சலுகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.**

- அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கு உணவும் தங்கும் வசதியும் அளிக்கப்படும்.
- 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன.
- 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும்.

## 4. விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்

- பெற்றோர் /பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கீ.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த துார விதி மாணவியருக்கு பொருந்தாது.

5) தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

5) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 30.06.2017 க்குள்ளும் கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2017க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ/ மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத்தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

6) தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத்தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மாணவ/மாணவியர் அரசின் இச்சலுகைகளை பெற்று, பயனடையுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

கரூர்.